சுருக்கம்

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் – தமிழ்நாட்டில் அரசு பள்ளிகளில் செயல்படும் சத்துணவு மையங்களில் 25 பயனாளிகளுக்கு அதிகமாக பயன்பெறும் பயனாளிகளைக் கொண்ட 25,440 சத்துணவு மையங்களுக்கு எரிவாயு அடுப்புகள் புதியதாக வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை

அரசாணை (2ப) எண்.15

நாள் 14.05.2025
திருவள்ளுவர் ஆண்டு 2056
விசுவாவசு, சித்திரை 31

படிக்க:–

1. அரசாணை (ப) எண்.113, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை, நாள் 23.04.2025.
2. மாண்புமிகு சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்புகள், நாள் 16.04.2025.
3. சமூக நல ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.732110 / சஉதி2(2)/ 2025, நாள் 17.04.2025.

------

ஆணை :–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தொடரா செலவினத்திற்கான ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, மாநில அரசின் பங்குடன் சத்துணவு சமையல் கூடங்களின் பராமரிப்பு மற்றும் சிறு பழுது நீக்கும் செலவினத்திற்காக ரூ.3,52,70,000/–ம், எரிவாயு அடுப்பு மற்றும் ஏனைய சமையல் உபகரணங்கள் வழங்கிட ரூ.25,13,35,000/–ம் ஆக மொத்தம் ரூ.28,66,05,000/– ஒப்பளிப்பு செய்யப்பட்டு ஒற்றைச் சாளர முகமை கணக்கில் (SNA) செலுத்தப்பட்டுள்ளது. மேலும், 2025–2026–ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்ட நிதிக்கு கூடுதலாக ரூ.25,13,35,000/– 2025–2026–ம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் வழங்கியும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. 2025–2026–ஆம் ஆண்டிற்கான சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்ந்த மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பிறவற்றினிடையே, பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:–

> **"தமிழ்நாட்டில் செயல்படும் சத்துணவு மையங்களில் 25 பயனாளிகளுக்கு அதிகமாக பயன்பெறும் 25,440 சத்துணவு மையங்களுக்கு 9.66 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எரிவாயு அடுப்புகள் புதியதாக வழங்கப்படும்"**

த.பி.பா.,

3. மேற்காண் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, தமிழ்நாட்டில் அரசு பள்ளிகளில் செயல்பட்டு வரும் 25 பயனாளிகளுக்கு அதிகமாக பயன்பெறும் பயனாளிகளைக் கொண்ட, 25,440 சத்துணவு மையங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட எரிவாயு அடுப்புகளுக்கு மாற்றாக, புதிய எரிவாயு அடுப்புகள் வழங்கிடவும், இதனை செயல்படுத்திட அரசுக்கு ஏற்படும் செலவினத் தொகை ரூ.9,66,13,250/- (ரூபாய் ஒன்பது கோடியே, அறுபத்து ஆறு இலட்சத்து, பதிமூன்றாயிரத்து இருநூற்று ஐம்பது மட்டும்)-ஐ ஒப்பளிப்பு செய்தும் ஆணை வழங்குமாறு மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் சமூக நல ஆணையர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

<u>சத்துணவு மையங்களுக்கு வழங்கப்பட வேண்டிய எரிவாயு அடுப்புகளின் விவரம்</u>:-

| வ. எண் | விவரங்கள் | பயனாளிகள் எண்ணிக்கை | | | | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 25-50 | 51-100 | 101-150 | 151-200 | 201-300 | 301-400 | 401-500 | 500 மேல் | |
| 1 | பள்ளிகளின் எண்ணிக்கை | 10522 | 8131 | 5044 | 2892 | 3127 | 1477 | 740 | 429 | 32362 |
| 2. | அரசு உதவி பெறும் பள்ளிகளின் எண்ணிக்கை | 1929 | 1490 | 925 | 530 | 573 | 270 | 135 | 84 | 5936 |
| 3. | அரசு உதவிபெறும் பள்ளிகளின் எண்ணிக்கையை (கழிக்க) | 8593 | 6641 | 4119 | 2362 | 2554 | 1207 | 605 | 345 | 26426 |
| 4. | 2024 - 2025 ஆம் ஆண்டு புதியதாக வழங்கப்பட்ட எரிவாயு அடுப்பின் எண்ணிக்கை | 248 | 207 | 0 | 0 | 531 | 0 | 0 | 0 | 986 |
| 5. | 2025 ஆம் ஆண்டு புதியதாக வழங்கப்பட்ட எரிவாயு அடுப்பினை கழிக்க | 8345 | 6434 | 4119 | 2362 | 2023 | 1207 | 605 | 345 | 25440 |
| 6. | தற்போது வழங்கப்படவேண்டிய அடுப்புகளின் எண்ணிக்கை | 8345 | 6434 | 4119 | 2362 | 2023 | 1207 | 605 | 345 | 25440 |

4. இந்நேர்வில் ஏற்படும் செலவினத் தொகையினை, ஒன்றிய அரசின் தொடரா செலவினத் தலைப்பில் 60 : 40 எனும் விகிதத்தில் ஒன்றிய அரசின் பங்காக ரூ.5,79,67,950/-யும் (ரூபாய் ஐந்து கோடியே, எழுபத்தொன்பது இலட்சத்து, அறுபத்து ஏழாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பது மட்டும்), மாநில அரசின் பங்காக, ரூ.3,86,45,300/-யும் (ரூபாய் மூன்று கோடியே, எண்பத்தாறு இலட்சத்து, நாற்பத்து ஐந்தாயிரத்து முந்நூறு மட்டும்), TN-335-SNA கணக்கிலிருந்து தொடரா செலவினத்தை மேற்கொள்ள அனுமதியும் தேவைகளின் அடிப்படையில் மாவட்டங்களுக்கிடையே அடுப்புகளின் எண்ணிக்கை மற்றும் அடுப்புகளின் ரகங்களை மாற்றிக்கொள்ளவும், எரிவாயு அடுப்புகளை, தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப் புள்ளி கோரும் விதி 1998 மற்றும் விதிகள் 2000-ஐ பின்பற்றி மின்னணு ஒப்பந்த முறையில் கொள்முதல் செய்திடவும் அனுமதியளிக்குமாறும் சமூக நல ஆணையர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

5. மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, சமூக நல ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. அதனடிப்படையில், அரசு பள்ளிகளில் செயல்பட்டுவரும், 25 பயனாளிகளுக்கு அதிகமாக பயன்பெறும் பயனாளிகளைக் கொண்ட, 25,440 சத்துணவு மையங்களுக்கு, ஏற்கனவே வழங்கப்பட்ட எரிவாயு அடுப்புகளுக்கு மாற்றாக, புதிய எரிவாயு அடுப்புகள் வாங்கிட அனுமதியும், இதன்பொருட்டு அரசுக்கு ஏற்படும் செலவினம் ரூ.9,66,13,250/- (ரூபாய் ஒன்பது கோடியே அறுபத்து ஆறு இலட்சத்து பதிமூன்றாயிரத்து இருநூற்று ஐம்பது மட்டும்)-ஐ (60:40 எனும் விகிதத்தில் ஒன்றிய அரசின் பங்காக ரூ.5,79,67,950/-ம், மாநில அரசின் பங்காக ரூ.3,86,45,300/-யும்) TN-335-ஒற்றைச் சாளர முகமை கணக்கிலிருந்து (SNA) தொடரா செலவினத்திற்கு மேலே பார்வை ஒன்றில் காணும் அரசாணையில் அனுமதி அளிக்கப்பட்ட நிதியிலிருந்து செலவு செய்திட சமூக நல ஆணையருக்கு அனுமதியும் வழங்கலாம் எனவும், மேற்கண்டவாறு அனுமதிக்கப்படும் எரிவாயு அடுப்புகளை தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி கோரும் விதி 1998 மற்றும் விதிகள் 2000-ஐ பின்பற்றி மின்னணு ஒப்பந்த முறையில் கொள்முதல் செய்திட வேண்டும் எனவும் முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

6. இவ்வாணை நிதித்துறையின் மின் அலுவலக எண்.10233252/நிதி(சந)/2025, நாள் 13.05.2025-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெயஸ்ரீ முரளீதரன்
அரசு செயலாளர்

பெறுநர்
சமூக நல ஆணையர், சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சமூக நல ஆணையர் வழியாக)
தலைமைத் தணிக்கை இயக்குநர், சென்னை-18.
மாநிலக் கணக்காயர், சென்னை-18/35.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-35.
நகல்
மாண்புமிகு சமூக நலன் - மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
அரசு செயலாளர் அவர்களின் தனிச் செயலாளர்,
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, சென்னை-9.
நிதித்(சந)துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

14/05/2025

பிரிவு அலுவலர்
14/5/2025